புஸ்தகம்-5 அத்தியாயம்-1

'அருண்! அரூண்! பள்ளிக்கூடத்திற்கு போக நேரமாச்சு பாரூ. இன்னும்மா கிளம்பல?' இது அதிகாலை சுப்பிரபாதம் அருணின் தாயார் கீதாவிடமிருந்து. இது எல்லார் வீட்டிலும் நடக்கும் காலை நேரக்கூத்து தான். அருண் வீடும் அதற்க்கு வித்தியாசமல்ல. ஒரு சில சமயங்களில் எல்லாமே சீக்கிரமாக நடந்துவிடும். அந்த மாதிரி நாட்களில் கீதாவிற்கு ஒரு மாஜிக் நடந்த்து மாதிரி தோன்றும். ஆனால் ஒரு சில தினங்களில் பூகம்பமே வெடித்த்து போல எல்லாமே தாறுமாறாக இருக்கும். அந்த மாதிரி நாட்களில் கீதா வீட்டையே ஒரு உளுக்கு உளுக்குவிடுவார்.

சமையல் அறையிலிருந்து கீதா போட்ட கூச்சல் அருண் காதிற்கு எட்டியதோ தெரியவில்லை, ஆனால் அருகே இருந்து பக்கரூவிற்கு விழுந்தது. அது ஓடி வந்து கீதாவின் காலை முட்டியது. கீதா அதை ஒரு முறை விட்டார். அவ்வளவு தான், பக்கரூ ஓடிப் போய் தனது வாலைச்சுருட்டி படுத்துக்கொண்டது.

அருணிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

'அரூண்! அரூண்! நான் கத்தரது காதுல விழலையா? இன்னும் அப்படி என்ன மேல பண்ணிட்டுஇருக்க?' என்று மாடிப்படியில் சில படிகள் ஏறி கூப்பிட்டுப் பார்த்தார்.

அப்பொழுது, மாடியில் உள்ள குளியல் அறைக்கதவு மெல்லத் திறந்த்து. சினிமாக்கலில் வரும் கனவு காட்சி போலே, புகை மண்டலம் போல, நீர் ஆவி மேகம்போல வெளிவந்தது. அதிலிருந்து தேவகுமாரன் போல அருண் வெளியே வந்தான். அவன் தனது தலைமுடியை mohawk போல வாரியிருந்தான்.

'அம்மா, என்னாச்சு அம்மா? எதற்கு இந்த பதட்டம்?' என்று ஏதோ ஒரு super hero ஒரு பேதைப் பெண்ணைக் கேட்பது போலக் கேட்டான்.

கீதா மௌனமாக கடிகாரத்தைக் காட்டினார். அருண் மணியைப் பார்த்து, தோளைக் குலுக்கிச் சென்றான். அவன் அம்மாவின் முகத்தில் தெரிந்த எரிச்சலை சட்டை செய்யாமல் சென்றான்.

'அம்மா, நிறைய நேரம் இருக்கு, அம்மா. அவசரமே படவேண்டாம்,' என்று அம்மாவிற்கு ஆறுதல் கொடுத்து, அவர் கன்னத்தில் முத்தம் கொடுத்து அவனது அறைக்குள் சென்றான்.

அருணுக்குத் தெரியும், இன்னும் அரை மணி நேரத்தில் அவன், உடை அணிந்து கொண்டு, காலை உணவை முடித்துக் கொண்டு, மதிய சாப்பாடை பையில் எடுத்துக் கொண்டு, home work சரி பார்த்து எடுத்து, தனது சைக்கிளில் காற்று சரியாக உள்ளதா என்று பார்த்து, பக்கரூவோடு சில நிமிஷங்கள் கொஞ்சி விளையாடி, எல்லாம் செய்து முடிக்க வேண்டும். எல்லா வற்றையும் அவன் நேரத்தில் முடித்து விடுவான் அன்று அவனுக்கு ஒரு அசாத்திய துணிச்சல்.

'ஓடு! நேரமாச்சு பாரூ. இன்னும் ஒரு தடவை late slip வாங்கினேனா, உன்னை ஒரு வழி பண்ணிடுவேன்.,' என்று கீதா பொறுமை இழந்து ஒரு கத்து விட்டார்.

அம்மாவின் சத்தம் கேட்டு, ஒரு military General-லின் உத்திரவிற்கு ஒரு ராணுவ வீரன் கட்டப்படுவது போல படபடவென்று பம்பரமாக செயல்பட்டான். தனது அறையிலிருந்து சட்டையும் பான்ட்டும் சம்பந்தேமில்லாத ஒரு கலரில் போட்டுக்கொண்டு வந்தான். அதுவும் இல்லாமல், இரு கால்களிலும் இரு வித கலரில் socks போட்டுக்கொண்டு வந்தான். வேகவேமாக ரொட்டித்துண்டுகளை வாயில் அடக்கிக் கொண்டான். தன் பையில் home work எடுத்து வைக்கும் போது தான் முந்திய தின சாப்பாடை சாப்பிடவில்லை என்று கவனித்தான். அதை தன் அம்மாவிற்குத் தெரியாமல் மெதுவாக சமையல் அறையில் உள்ள sink-ல் கொட்டினான்.

அந்த சில நிமிடங்களில் வீடு ஒரு குருக்ஷேத்திரம் போலத் தோன்றியது.

திடீரென்று என்ன தோணியதோ தெரியவில்லை, தடதடவென்று மாடிக்கு ஓடுனான். கீதா என்னவென்று கேட்குமுன், மாடியில் உள்ள rest room-ல் தண்ணீர் குழாய் திறக்கும் சத்தம் கேட்டது. அதன் கூடயே அருண் பல் தேய்குகம் சத்தமும் கேட்டது.

அவ்வளவு தான், கீதா ஒரு எரிமலை ஆகிப்போனார். 'அருண், நீ இன்னுமா பல் விளக்கவில்லை? என்ன கரும்ம டா இது,' என்று ஒரு அதட்டு போட்டார். 'இதுக்கத்தான் காலையில சீக்கிர எழுந்துக்கனும்னு சொல்றேன். கேட்டாத் தானே?'

இது தன் அம்மாவிடம் இருந்து வரும் முதல் புத்தமதி என்று அவனுக்குத் தெரியும். அடுத்த புத்திமது வரும் முன் பள்ளிக்கூடத்திற்கு ஓடிப் போய்விட வேண்டும் என்று சொல்லிக்கொண்டான்.

அருணின் சட்டை, பான்ட், மற்றும் socks-யை கவனித்தார் கீதா. 'நான் ஒருத்தி, எல்லாத்தையும் மடிச்சு வைக்கிறது தெரியலயோ சாருக்கு? என்ன இது கச்சாமுச்சா என்று, ஒரு கூத்தாடி போல?'

'அம்மா, இது தான் இப்ப cool thing. என் நண்பி sarah கூட இது தான் இப்ப trend-ன்னு சொல்லுரா. Take it easy, அம்மா,' என்று சொல்லிக் கொண்டே

தன் பள்ளிக்கூடப் பையை எடுத்தான்.

'0ops!' என்று சொல்லிக்கொண்டே, மாடிக்கு திரும்பி ஓடினான்.

சில வினாடிகளில் தலையில் helmet-யை போட்டுக்கொண்டு படிகளில் தபதபவென்று இறங்கினான். தன் பள்ளிக்கூட பையை எடுத்துக்கொண்டு, garage பக்கமா ஓடினான். கீதாவிற்கு எரிச்சல் தாங்கமுடியவில்லை. இதில் கூத்து என்னவென்றால், அருணின் அப்பா ரமேஷிற்கு இதெல்லாம் ஒரு ஹாஸ்மான நிகழ்ச்சி போலத் தோன்றும். அப்பப்போ அவர் இதையெல்லாம் சுவாரஸ்யமாக வீடியோ பிடிப்பார். கீதாவிற்கு அப்பொழுதெல்லாம் ரமேஷை கம்பில் கட்டி வைத்து உதைக்கலாம் என்று தோணும்.

அருண்ண கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். பள்ளிக்கூடத்தில் மணியடிக்க இன்னும் பத்து நிமிடங்களே இருந்தது.

'அருண், ஒரு நிமிசூம்,' என்று கீதா அருணை கூப்பிட்டார்.

'Sorry, அம்மா. It's getting late," என்று சொல்லிக்கொண்டே தனது சைக்கிளின் stand-யை ஒரு உதை உதைத்து, அதன் மேல் உட்கார்ந்து ஒரு புயல் போல கிளம்பினான்.

அருண்ண கிளம்பிய பின்னர் தான் கீதா தன் சுயநினைவிற்கு வந்தார். வீடு ஒரே நிசப்தமாக இருந்தது. பக்கரூகூட தன் படுக்கையிலிருந்து நகராமல் படுத்திருந்தது. ரமேஷோ இன்னும் உரக்கத்தில் இருந்தார். அவருக்கு அலுவல் பலு காரணமாக இப்பவெல்லாம் காலையில் சற்று தாமதமாகத் தான் எழுகிறார். ரமேஷின் உதவி காலையில் கீதாவிற்கு மிகவும் தேவை. தானே அருணோடு மல்லுக்கட்டும் போது கீதாவிற்கு ரமேஷை ஒரு உலுக்கு உலுக்கி எழுப்பிவிடவேண்டும் என நினைப்பார்.

அருண்ண எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்துக் கொண்டு போனானா என்று கீதா ஒரு நோட்டம் விட்டார். சமையல் அறை மேடையில் ஒரு ஓரத்தில் அருணின் தண்ணீர் பாட்டில் தண்ணீர் ரொப்பப்பட்டு மூடி போட்டு இருந்தது. அது அவன் அடம் பிடத்து போன வாரம் தான் வாங்கிய புத்தம் புதிய பாட்டில். அதை எடுத்துச்செல்லாமல் போய்விட்டான். கீதாவிற்கு

தண்ணீர் பாட்டில் மட்டும் எடுத்துக்கொள்ளாமல் போனால் அது அவருக்கு பதட்டத்தை உண்டு பண்ணிவிடும். பள்ளிக்கூடத்தில் water fountain இருந்தாலும், கீதா என்னமோ அருணை வீட்டிலிருந்து தண்ணீர் கொண்டுபோகச் சொல்வார். அப்படியே பழகி விட்டது அவனுக்கும்.

'போச்சுடா, பாட்டில விட்டுட்டு போயிட்டானா,' என்று சொல்லிக்கொண்டே தனது மற்ற வேலையை செய்யத் தொடங்கினார். அவருக்கும் அலுவல் போகும் நேரம் ஆகிவிட்டது.

அன்று அருண் தண்ணீர் பாட்டிலை பள்ளிக்கூடத்திற்கு கொண்டு போகாததால் அவன் மீண்டும் ஒரு புதிய பிரச்சினையை சந்திக்கப் போகிறான் என்று அவருக்குத் தெரியாது.

- முடிவு -